# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் மே மாதம் 22 ஆம் தேதி முதல் திறந்தவெளி பொழுதுபோக்கு வசதிகளை பாதுகாப்புடன் மீண்டும் திறந்துவிட தயாராகிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே 20, 2021) – இன்றைய தினம் ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் அறிவிப்பினைத் தொடர்ந்து, மே மாதம் 22 ஆம் தேதி முதல், திறந்தவெளி பொழுதுபோக்கு வசதிகளை பாதுகாப்புடன் மீண்டும் திறந்துவிட ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் தயாராகிறது.

**திறந்தவெளி பொழுதுபோக்கு வசதிகள்**

திறந்த வெளி பொழுது போக்கு வசதிகளில், கோல்ஃப் மைதானங்கள், வாகனம் ஓட்டும் களங்கள், கால்பந்து மற்றும் இதர விளையாட்டு மைதானங்கள், பேஸ்பால் டயமண்டுகள் மற்றும் மட்டை பிடித்து விளையாடும் கூண்டுகள், டென்னிஸ் மற்றும் கூடைப்பந்து களங்கள், புல்வெளி பௌலிங் மற்றும் பாவ்ச்சி (bocce), மற்றும் BMX மற்றும் சறுக்கு பூங்காக்கள் ஆகியவை அடங்கும் மற்றும் அனுமதிக்கப்படும்.

**அனுமதிக்கப்படாதவை**

இந்தச் சமயத்தில் மைதானங்கள் மற்றும் களங்களில் திறந்தவெளி உடற்பயிற்சி மற்றும் அணி சேர்ந்து விளையாடுதல் (பயிற்சி செய்தல் உள்பட) அனுமதிக்கப்படுவதில்லை. திறந்தவெளி நீச்சல்குளங்கள் மற்றும் நீர் விளையாட்டுக்கள் மூடப்பட்டே இருக்கும்.

மேலும் தகவல்களுக்கு மற்றும் பதிவு செய்தலுக்கு வருகை தரவும்: www.brampton.ca/recreation

**சமூகக் கூட்டங்கள்**

சமூகக் கூட்டங்கள் மற்றும் ஏற்பாடு செய்யப்பட்ட திறந்தவெளி நிகழ்ச்சிகளில் கூடும் நபர்களின் எண்ணிக்கையானது, ஐந்து நபர்களுக்கு மட்டுமே என வரம்பு குறிக்கப்பட்டுள்ளது; இந்த திறந்தவெளி வசதிகளில் பங்கேற்கும் நபர்களில், வீட்டிற்கு வெளியிலான நபர்களையும் சேர்த்து ஐந்து நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

**பொதுமக்கள் சுகாதார நடவடிக்கைகள் பற்றிய புது செய்திகள்**

மாகாணத்தின் புதிதாக அறிவிக்கப்பட்ட, நகரை மிண்டும் திறந்துவிடுவதற்கான திட்டமானது மாகாணத்தை பாதுகாப்பாகவும் எச்சரிக்கையுணர்வுடனும் மீண்டும் திறந்து

விடுவது, மாகாணம் முழுவதுமாக தடுப்பூசி செலுத்தப்பட்ட விகிதத்தின் அடிப்படையில் பொதுமக்களுக்கான சுகாதார நடவடிக்கைகளை படிப்படியாக நீக்குவது மற்றும் பொது மக்களின் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியப் பராமரிப்புக்கான முக்கிய சுட்டிக்காட்டி அளவுகளை மேம்படுத்துவது என மூன்று படிகள் கொண்டது.

மாகாணம் தழுவிய அவசரநிலை பிரகடனம் மற்றும் வீட்டிலேயே இருங்கள் எனும் உத்தரவு ஆகிய இரண்டுமே குறைந்தது ஜூன் 2 ஆம் தேதி வரை அமலில் இருக்கும். வீட்டிலேயே இருங்கள் எனும் உத்தரவானது, மளிகை அல்லது மருந்துக் கடைக்கு செல்லுதல், சுகாதார சேவைகள் பெறச் செல்லுதல் உடற்பயிற்சிக்காக அல்லது அத்தியாவசியப்பணிகளுக்கு செல்லுதல் ஆகிய விதிவிலக்குகள் நீங்கலாக ஒவ்வொருவரும் வீட்டிலேயே இருக்க ஆணையிடுகிறது.

மாகாண செய்தி வெளியீட்டினை இங்கு படிக்கவும்

## நகரின் சேவைகள் மற்றும் வசதிகள்

### நகரின் சேவைகள் மற்றும் வசதி அமைப்புகள்

சிட்டி ஹால் மற்றும் பெருநிறுவன வசதியமைப்புக்கள்

சிட்டி ஹால் மற்றும் பெருநிறுவன வசதியமைப்புக்கள் தனி நபர் சேவைகளுக்கான முன்பதிவின் பேரில் மட்டுமே திறந்திருக்கும். போகிறபோக்கில் நுழைவதற்கு அனுமதியில்லை. முன்பதிவு செய்வதற்கு இங்கு வருகை தரவும்: www.brampton.ca/skiptheline.

### நகரின் பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் வசதிகள்

ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து பொழுதுபோக்கு வசதி கட்டிடங்களும் பொதுமக்கள் நுழைய முடியாதபடி மூடப்பட்டிருக்கும் மற்றும் உள்ளரங்க நிகழ்ச்சிகள் யாவும் அடுத்த அறிவிப்பு வரும் வரை நிறுத்தப்படுகின்றன.

## தடுப்பூசி செலுத்தல்

பீல் பிரதேசத்தில் வசிக்கின்ற, வேலை செய்கின்ற, அல்லது பள்ளியில் படிக்கின்ற 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர் அனைவரும், தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவகங்களில் கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கான முன்பதிவினை இப்போது செய்துகொள்ளலாம். 12 முதல் 15 வரையிலான வயதினருக்கான முன்பதிவுகளை, ரீஜன் ஆஃப் பீல் முன்பதிவு அமைப்பினை உபயோகித்து செய்ய வேண்டும். முன்பதிவு செய்வதற்கான உதவி எவருக்கேனும் தேவைப்படின்,

அவர்கள் 905.791.5202, என்ற எண்ணில் காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை வாரத்தில் எல்லா நாட்களிலும் ரீஜன் ஆஃப் பீல் கோவிட்-19 தடுப்பூசி செலுத்துதல் உதவிக்கரம் தொலைபேசியை அழைக்கலாம்.

கோவிட்-19 தடுப்பூசி செலுத்துதல் பற்றிய மிக சமீபத்திய தகவல்களுக்கு மாகாணத்தின் தடுப்பூசி முனையத்திற்கு வருகை தரவும்.

**லின்குகள்**

- ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 நிகழ்ச்சி அமைப்பு மற்றும் சேவைகள் பற்றிய புது தகவல்கள் (City of Brampton COVID-19 programming and service updates)
- ப்ராம்ப்ட்டன் நகரம் – என்னவெல்லாம் திறந்திருக்கும் , என்னவெல்லாம் மூடப்பட்டிருக்கும் (City of Brampton – what's open, what's closed)
- கோவிட்-19 அடையாளங்கள் (COVID-19 Symptoms)
- கோவிட்-19 தடுப்பூசி (COVID-19 vaccine)
- ப்ராம்ப்ட்டன் நகரில் சோதித்துக் கொள்ளுதல் (Testing in Brampton)
- தனக்குத்தானே எப்படி தனிமைப்படுத்திக் கொள்ளுதல் (How to self-isolate)
- கோவிட்-19 தொற்று பரவல் சமயத்தில் தொழிலகங்கள் மற்றும் பணியிடங்களை பாதுகாப்பாக வைத்தல் (Keeping businesses and workplaces safe during COVID-19)

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுசுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca